23.01.2026

O.S.No. 205/2024

PW2– ஆறுமுகம் – த/பெ. சுப்பையா

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 23.01.2026

<u>குறுக்கு விசாரணை :</u> ( 1ம் பிரதிவாதி தரப்பில்)

1. நானும், வாதியும் ஒரே வீட்டில் குடியிருந்து வருகிறோமா என்றால் இல்லை. நான் பொட்டல்புதுார் கிராமம், பிஸ்மி நகர், கதவு எண்.10/69 வீட்டில் குடியிருந்து வருகிறேன். எனது மகனும் அதே முகவரியில் குடியிருந்துவருகிறார் என்றால் சரியல்ல, அடுத்தவீட்டில் குடியிருந்து வருகிறார். திருமணமாகியபின்பு தனியாக சென்றுவிட்டார் என்றால் சரிதான்.

2. சொத்து விவரங்களை எனது மகனிடம் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சொத்துவிவரங்கள் எனது மகனுக்கு தெரியும் என்றால் சரிதான். எனது மகன் பி.எஸ்.சி வரை படித்துள்ளார். எனது தகப்பனார் பெயர் சுப்பையா என்றால் சரிதான். சுப்பையாவின் சகோதரி பெயர் லெட்சுமி என்றால் சரியல்ல, மனைவி பெயர் லெட்சுமி. சுப்பையாவுக்கு சகோதரி கிடையாது. பிஸ்மி நகரில் 1999 முதல்குடியிருந்து வருகிறேன்.

3. சுப்பையாவின் தகப்பனார் பெயர் பிச்சையா மூப்பனார். எங்களது குலத்தெய்வ கோவில் ஆழ்வார்குறிச்சியில் உள்ளது. சுப்பையாவின் சொந்த ஊர் வழுதுார் என்றால் சரிதான். சுப்பையா பிறந்து, வளர்ந்தது எல்லாம் வழுதுார் என்றால் சரிதான். அதுதான் அவர் பூர்வீகம் என்றால் சரிதான். சுப்பையா வழுதுாரில் திருமணம் செய்துள்ளார். எனது தந்தை

திருமணத்திற்கு பிறகுதான் முதலியார்பட்டிக்கு வந்தார். நான் பிறந்து வளர்ந்தது வழுதூர் என்றால் சரியல்ல, முதலியார்பட்டிதான். எனது தந்தைக்கும், முதலியார்பட்டி ஊருக்கும் ஆரம்பத்தில் எந்த சம்பந்தம் கிடையாது என்றால் சரிதான்.

4. எனது தந்தை எந்த ஆண்டு முதலியார்பட்டிக்கு வந்தார் என்றால் எனக்கு தெரியாது, நான் பிறப்பதற்கு முன்பே வந்துவிட்டார். எனது தகப்பனார் சொத்தை கிரையம் வாங்கி அனுபவம் செய்துவந்தார் என்றால் சரிதான். அந்த சொத்து ஆரம்பத்தில் திருமலையம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். திருமலையம்மாள், எனது தகப்பனாருக்கு எழுதிக்கொடுத்த பத்திரம் பதிவுப்பத்திரம் என்றால் சரிதான். அந்த கிரையப்பத்திரத்தின் அடிப்படையில் சுப்பையா மூப்பனார் அனுபவம் செய்துவந்து வாரிசு அடிப்படையில் எனக்கு கிடைத்ததாக கூறுகிறேன் என்றால் சரிதான்.

5. சுப்பையா மூப்பனார் 1997ல் இறந்துவிட்டார். அவரது இறப்புசான்றும், வாரிசுசான்றும் என் கைவசம் உள்ளது என்றால் சரிதான். சுப்பையமூப்பனாரின் கிரைய ஆவணத்தை பார்த்தால் பிராதுதபசில் சொத்தின் கிழமேல், தென்வடல் அளவு தெரியுமா என்றால் தெரியாது. என் தந்தைபெயரில் உள்ள கிரையப்பத்திரம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது, அது தற்போது எறிந்துவிட்டது.

6. பதிவு ஆவணங்களுக்கு விரோதமாக பட்டா ஏற்பட்டுள்ளதால்தான் நான் என் தந்தையின் பெயரில் கிரைய

ஆவணத்தை தாக்கல் செய்ய மறுக்கிறேன் என்றால் சரியல்ல. என் தகப்பனார் பெயரில் உள்ள கிரைய ஆவணம் எறிந்துவிட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7. பிராது தபசில் சொத்திற்கு கிழக்கு பக்கமாக உள்ள முடுக்கு என் தகப்பனார் காலத்திலே இருக்கிறது. அந்தமுடுக்கிற்கு கிழக்குபக்கம் உள்ள வீடு முத்தையாவிற்கு பாத்தியப்பட்டது. முத்தையாவிற்கு மேற்குபக்கமாக வாசல் உள்ளது என்றால் உள்ளது, அது எங்களுக்கு தெரியாமல் கட்டப்பட்டுவிட்டது. மேற்படி வாசல் கட்டி சுமார் 20 ஆண்டுகள் இருக்கும் என்றால் சரிதான்.

8. மேற்படி முடுக்கு வழியாக தான் முத்தையா மேலச்சுவரை வெள்ளையடித்து பராமரித்துவருகிறார் என்றால் சரிதான். சுமார் எத்தனை ஆண்டுகளாக வெள்ளையடித்துவருகிறார் என்றால் வீடுகட்டிய காலத்தில் இருந்தே அடித்துவருகிறார். அவர் வீடு கட்டி சுமார் 20 ஆண்டுகள் இருக்கும் என்றால் சரிதான். மேற்படி முடுக்கு வழியாக தான் வடக்கே உள்ள தெருவுக்கும் சென்றுவருகிறார் என்றால் சரியல்ல.

9. எனது தகப்பனார் பெயரில் உள்ள கிரையப்பத்திரத்திற்கு சார்பதிவாளர் அலுவலகத்தில் நகல் எடுத்து தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியும். எனது தகப்பனார் இறந்தபிறகு சொத்துக்கள் தொடர்பாக எந்த பாகமும் நடைபெறவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு பிரமு அம்மாள், ஆறுமுகத்தம்மாள், ராமசாமி, நான் மற்றும்லெட்சுமி ஆகியோர் வாரிசுகள்.

10. எனது தகப்பனார் இறந்தபிறகு அனைத்து வாரிசுகளும் சொத்தை அனுபவம் செய்துவருகிறோம் என்றால் சரிதான். வாரிசுகள் அனைவருக்கும் தனிப்பட்ட பாத்தியதை இல்லை என்றால் சரியல்ல, எனக்கும், எனது சகோதரருக்கும் தனிப்பட்ட பாத்தியதையை எனது சகோதரிகள் எழுதிக்கொடுத்துள்ளார்கள், அது பதிவு செய்யப்பட்ட ஆவணம். எனக்கு பட்டா தான் உள்ளது, எனது சகோதரருக்குதான் பதிவு செய்யப்பட்ட ஆவணம் உள்ளது.

11. பதிவு ஆவணங்கள் எனக்கு விரோதமாக உள்ளதால் தான் நான் முன்னுக்குபின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பட்டா சம்பந்தமாக எதுவும் விசாரணை நடைபெற்றதா என்றால் நடைபெறவில்லை. மோசடி செய்ய வேண்டும் என்ற நோக்கோடு தவறான அளவுகள் கொண்ட பட்டாவை எனது மகனுக்கு மோசடி செட்டில்மெண்ட ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல.

12. பட்டாவில் உள்ள அளவுகளும், ஏற்பாடு ஆவணத்தில் உள்ள அளவுகளும் தவறு என்றால் சரியல்ல. எனது சகோதரிகளை விசாரித்தால் விடுதலைகொடுத்தவிவரம் தெரியவரும் என்றால் சரியல்ல, அவர்களுக்கு தெரியாது. சுப்பையா மூப்பனார் சொத்து எனக்கு கிடைத்தது என்பதை காட்ட எனது சகோதரியை விசாரிக்க முடியுமா என்றால் அவர்கள் தற்போது உயிருடன் இல்லை.

13. பிராதில் சொல்லியுள்ள அளவுகளின்படி நானோ, எனது மகனோ அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. வாதி எனது மகன் என்பதால்

அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. உரிமையில்லாத சொத்தை பொறுத்து கூடுதல் அளவுகள் போட்டு ஏற்பாடு ஆவணம் ஏற்படுத்தியுள்ளதால் அது செல்லத்தக்கதில்லை என்றால் சரியல்ல. சுப்பையா மூப்பனார் பெண் வாரிசுகள் விடுதலை கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி